பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 7 (22—7—68) திங்கள் ★ வெளியூர்: ஆடி 8 (23—7—68) செவ்வாய் [இதழ்: 32

மக்கள் நமது பக்கமே!

சென்னை, ஜூலை 20—

"ஆட்சிப் பொறுப்பேற்ற பதினைந்து நாட்களில், 'தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன; தொழிலாளர்களுக்கு வேலையில்லை; பள்ளிக்கூடங்களெல்லாம் மூடப்பட்டுவிட்டன; விவசாயிகளுக்கு நிம்மதியில்லை; படி அரிசித் திட்டம் பைத்தியக்காரத் திட்டம்; இவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

டெல்லி யோசனை—அண்ணா மறுப்பு

விவசாய வருமான வரி விதிப்புக்கு எதிர்ப்பு—'மூன்று ஆண்டுகளுக்கு அதுபற்றி நினைத்துப் பார்க்கவும் முடியாது' எனப் பதில்

பொருளாதாரத் துறையில் இலாபம் தரும் தொழிலாக விவசாயம் இல்லை என விளக்கம்

காஞ்சிபுரம், ஜூலை 22—

"அண்மையில் டெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும், திட்டக் குழுக் கூட்டத்திலும், நிதிக் குழுக் கூட்டத்திலும்; வேளாண்மை வரி விதிப்பதற்கான சூழ்நிலை வந்திருப்பதாக என்னிடம் சுட்டிக்காட்டப்பட்டது; ஆனால் நான், அதற்கு உடன்படவில்லை; 'இன்னும் மூன்றாண்டுகட்கு அதுபற்றி நான் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது' என்று கூறிவிட்டேன்.

"விளைச்சல் அதிகரித்ததன் காரணமாக விவசாயிகள் அண்மை ஆண்டுகளில் அதிக வருவாய் பெறுவதாகக் காணப்பட்டாலும், 'விவசாயத் தொழில், பொருளாதாரத் துறையில் இலாபந் தரும் தொழிலாக இன்னும் அமையவில்லை' என்பதே என் கருத்தாகும்.

"நான் ஜப்பான் சென்றிருந்தபோது, கையால் இயக்கக்கூடிய மின்சாரக் கலப்பைகள் பெரும் அளவில் அங்கே பயன்படுத்தப்படுவதைக் கண்டேன்; அத்தகைய உழு கருவிகள் இங்கே வந்தால், அது, படித்த இளைஞர்களை விவசாயத் துறைக்குக் கவர்ந்து ஈர்க்கக்கூடியதாக இருக்கும் என்பது மட்டுமன்றி, விவசாயம் நல்ல இலாபம் தரும் தொழிலாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், விவசாயிகளுக்குத் தனியார்துறை பாங்கிகளின் மூலம் கடன் வசதியளிக்கும் திட்டத்தைத் துவக்கிவைதது்ப் பேசுகையில் கருத்தறிவித்தார்கள்.

சிண்டிகேட் பாங்கி, செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 25 இலட்சம் கடன் வழங்கும் திட்டத்தின் துவக்க விழா, வாலாசாபாத் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

ஒன்றியத் தலைவர் திரு. பி. வி சம்பந்தம் அனைவரையும் வரவேற்றார்.

வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், விழாவுக்குத் தலைமைவகித்தார்.

சிண்டிகேட் பாங்கியின் தலைவர் திரு. டி. ஏ. பாய் அவர்களும் விழாவில் கலந்துகொண்டு பேசினார்.

மாவட்ட கலெக்டர் திரு. இலட்சுமி காந்தன் பாரதி விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்களையும் விளக்கினார்.

அண்ணா அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"அமெரிக்காவில் 8 சதவிகிதத்தினரே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றாலும், அவர்கள் தங்கள் நாட்டுக்கு மட்டுமன்றி, பிற நாடுகளுக்கும் உணவுத்தானிய ஏற்றுமதி செய்கிறார்கள்; அந்த அளவுக்கு அங்கே முன்னேறியிருக்கின்றனர். இங்கு நாம் 80 சதவிகிதத்தினர் விவசாயிகளாக இருந்தும், இன்னமும் உணவுத் தேவைக்கு அயலநாடுகளை நம்பியிருக்கும் அவலநிலை உள்ளது.

நாமும் நவீன இயந்திரங்களைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபடும் காலம் வரும். அப்போது படித்த இளைஞர்களும் விவசாயத்தில் ஈடுபட முன்வருவார்கள்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் பதில் சிறிய நீர்ம்பாசனச் திட்டங்களை வகுத்து, விவசாயிகட்கு மேலும் கடனுதவி அளிக்கலாம்.

கடன் வாங்குவது வருவாயைப் பெருக்குவதற்குத்தான் என்ற எண்ணத்துடன் விவசாயிகள் கடனைப் பெறவேண்டும்.

புதிய விவசாயக் கருவிகளை வாங்க இம்மாதிரியான பாங்கிகளை விவசாயிகள் தக்க முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பாங்கிகள் விவசாயிகளுக்கு அளிக்கும் கடனுக்கு வட்டி குறைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதைவிட, பாங்கி தரும் பணத்தைக் கொண்டு விவசாயத்தில் வருமானததைப் பெருக்கிக்கொள்வதற்கு முனையவேண்டும்.

சாதாரணமாக ஓர் ஏக்கரில் 15 மூட்டை நெல் விளைந்த நிலை போய், இப்போது 'ஏ.டி.டி. 27' மூலம் 37 மூட்டைகள் விளைவிக்கப்படுகின்றன. இதன் மூலம் ரூ. 476 அதிகப்படியான இலாபம் கிடைக்கிறது.

அதேபோல், 'ஐ. ஆர். 8' மூலம் ஏகருக்கு ரூ. 840 அதிகமாகக் கிடைக்கிறது.

இத்தகைய கூடுதலான பயன் தரும் நெல் விதைகளை விவசாயிகள் பயன்படுத்த, அரசு ஏராளமான முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

விவசாயிகட்குக் கடன் வழங்க முன்வந்த சிண்டிகேட் பாங்கியைப் பாராட்டுகிறேன். இதே போல் மற்ற பாங்கிகளும் முன்வர வேண்டும்."

திட்டங்களைப் பயன்படுத்தி நற்பயன் பெறுக!

விவசாயிகளுக்கு அமைச்சர் கோவிந்தசாமி வேண்டுகோள்

வேளாண்மைத் துறையமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"விவசாயிகளுக்குக் கடன் வசதி அளிக்க இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது நில அடமான பாங்கி, விவசாயத் தொழில் கழகம், மற்றும் தனிப்பட்ட பாங்கிகள்மூலம் கடன்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு பம்பு செட்டுகள் வாங்க ரூ 1-கோடியும், டிராக்டர்கள் வாங்க ரூ. 70-இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை சிண்டிகேட் பாங்கி இந்த ஆண்டு மட்டும் செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகட்கு ரூ 25-இலட்சம் கடன் வழங்க முன்வந்துள்ளது. இந்தத் தொகையை அளித்தபின்னர், மேலும் ரூ 25-இலட்சம் அளிக்கவும் இசைந்துள்ளது.

'செங்கற்பட்டு மாவட்டம் பின்தங்கிய மாவட்டம்' என்பதால், இந்த ஆண்டு இங்கே 200 கிணறுகள் வெட்ட ரூ. 37-இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய வசதிகளையெல்லாம் விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்."

காளை மாட்டு பிராண்டு கள்ளுக் கடை எங்கே?

சென்னை, ஜூலை 22—

நேற்று, 'காமராசர் பிறந்த நாள் ஊர்வலம்' என்ற பெயரால் சென்னை நகரில் காங்கிரசுக்காரர்களால் நடத்தப்பட்ட ஊர்வலம் எந்த அளவுக்கு அநாகரிகத்தையும், அருவருப்பையும் வெளிப்படுத்துவதாக இருந்தது என்பதை எடுத்துக் காட்ட, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் பொதுக்கூட்டத்தில் மன்னிப்புக் கேட்ட நிகழ்ச்சி ஒன்றே போதும்.

ஊர்வலத்தில், 'அலங்கார வண்டிகள்' என்ற பெயரில் அருவருக்கும் காட்சிகளை உருவாக்கி, ஆபாச நிகழ்ச்சிகளை நடத்திவந்தனர்.

போலீசார் மதுவருந்துவதாகவும், பெண்களிடம் சிலர் கேவலமாக நடந்துகொள்வதாகவும் சித்தரிக்கப்பட்ட வண்டி ஊர்வலத்தில் வந்ததைக் குறிப்பிட்டு திரு. சுப்பிரமணியம் மன்னிப்புக் கேட்டாராம்.

'அடிக்கிறாற்போல் அடிக்கிறேன்—அழுகிறாற்போல் அழு' என்ற பழமொழிப்படிதானா இந்த மன்னிப்பு நாடகம்—அல்லது, உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட உணர்ச்சியின் வடிவமா என்ற ஐயப்பாடு ஒருபுறமிருக்கட்டும்; மன்னிப்பு இந்த வண்டி ஒன்றுக்குத்தானா?

இன்னொரு வண்டி வந்ததே—'உதயசூரியன் கள்ளுக் கடை' என்ற பெயரில்—அதற்கு மன்னிப்புக் கோர வேண்டாமா?

'உதயசூரியன்' ஆட்சியிலா கள்ளுக்கடை திறக்கப்பட்டிருக்கிறது?

'உத்தமர் காந்தியாரின் வழி வந்தவர்கள்' என்று சொல்லிக் கொள்ளும் காங்கிரசுக்காரர்கள் ஆளும் மாநிலங்களில் அல்லவா மூடியிருந்த கள்ளுக் கடைகளெல்லாம் திறக்கப்பட்டுவருகின்றன!

உண்மையில் சொல்லப்போனால், 'காளை மாடு பிராண்டு கள்ளுக்கடை' என்றல்லவா, பெயர் சூட்டியிருக்கவேண்டும்?

காங்கிரசு ஆளும் கருநாடகத்திலும், ஆந்திரத்திலும், மகாராட்டிரத்திலும் மதுவிலக்குப் படும்பாடு நாட்டு மக்களுக்குத் தெரியாதா?

காங்கிரசு ஆளும் புதுவையில் 'பூர்ண மதுவிலக்கு'ச் செய்யப்படும் என்று கூறியா காங்கிரசார் ஆட்சிக்கு வந்தார்கள்? 'கள்ளுக் கடைகளை மூடமாட்டோம்' என்று உறுதி கூறியல்லவா காமராசர் தேர்தல் பிரசாரம் செய்தார்?

மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருந்து வரும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டாத பழம்பெரும் காங்கிரசுத் தலைவர்களே இல்லையே!

அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டைத் தமிழகத் தலைநகரில் முன்னிருந்து சிறப்பாக நடத்திக் காட்டியவரே அறிஞர் அண்ணா அவர்கள் தானே!

கழகத்தைப் பார்த்து எதிலும் 'காப்பி'யடித்து ஊர்வலம்—மாநாடு—என்றெல்லாம் நடத்தினாலும், அதில் பொருள் இருக்க வேண்டாமா—பொருத்தமிருக்க வேண்டாமா?

'புதுசு'களின் போக்கை, 'பழைய காங்கிரசுக்காரர்கள்' எனப்படுவோர் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்களே—'புத்தி' சொல்லியாவது திருத்த வேண்டாமா?

'நாங்கள் சொல்லி அவர்கள் கேட்பார்களா?' என்று பழைய காங்கிரசுக்காரர்கள் கூறுவார்களேயானால், அவர்கள் நிலைக்காகப் பரிதாபப்படுவதைத் தவிர வேறு என்ன செய்வது?

பாவம், பரிதாபம்!

‘அதிகாரக் குவியல் குறைய வேண்டும்’

‘மாநிலங்களுக்கு அதைப் பகிர்ந்தளிப்பது அவசியம்’

‘மத்திய அரசின் வலிமை அச்சுறுத்துவதாக இருந்தால் கூட்டுச் சக்தி மூலம் அதனைக் குறைக்க முனைவோம்’

அறிஞர் அண்ணாவின் தெளிவுமிக்க எச்சரிக்கை

சென்னை, ஜூலை 22—

“பலமான மத்திய அரசு வேண்டும் என்று கூறுகிறார்கள்; மத்திய அரசுக்குப் பலம் எதற்காக? -- அந்தப் பலம் யாருக்கு எதிராக -- என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்திட வேண்டும்.

“பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம்; தனிப்பட்ட அமைப்புக்கு இருக்கலாம்; மாநிலத் துரைத்தனத்துக்கு இருக்கலாம்; மத்தியத் துரைத்தனத்துக்கு இருக்கலாம்; ஆனால், அந்தப் பலம் யாருக்காக -- எதற்காகப் பயன்படுத்துவது என்பது பற்றி விளங்கிக் கொள்ளாமலும், விளக்கிச் சொல்லாமலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்!

“சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால், ஒரு துளியும் தயக்கமில்லாமல் அந்த வலிவைச் சேர்த்துத் தரத் தயார்; பாகிஸ்தானின் படையெடுப்பை அடக்க மத்திய அரசுக்கு வலிவு தேவையென்றால், நிச்சயம் அந்த வலிவைத் தேடித் தரத் தயார்; ஆனால் மத்திய அரசின் வலிவு அசாமிற்கு அச்சத்தைத் தர -- தமிழ்நாடு தத்தளிக்க -- கேரளத்திற்குக் கலக்கம் தருவதற்குத்தான் என்றால், நமது சுதந்தரச் சிந்தனையைச் சிறுகச் சிறுக அழித்துச் சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத்தான் என்றால், நமது கூட்டுச் சக்தியின் மூலம் -- நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்கிரம வலிவைச் சிறுகச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும்.”

இவ்வாறு அறிஞர் அண்ணா அவர்கள், தமிழரசுக் கழக ஐந்தாவது மாநில மாநாட்டையொட்டி நடைபெற்ற மாநில சுயாட்சிக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி எச்சரிக்கை விடுத்தார். இது தொடர்பாக மேலும் அவர் விளக்கியதாவது:—

வாதத்திற்கும் ஏற்றது-- அரசியலுக்கும் நல்லது!

நமக்கிருக்கிற கவலையெல்லாம், ‘தூக்கமுடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே’ என்பதுதான்!

மத்திய அரசின் வலிவு என்பது, ‘மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித் தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான்’ என்றால், அது, வாதத்திற்கும் ஏற்றது --- அரசியலுக்கும் நல்லது --- காரியத்திற்கும் உகந்தது!

ஆனால், ‘மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும் பலத்தையும் வைத்திருக்கும்; மாநிலங்களுக்குத் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம்தான்’ என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல!

புதிய வலிவு ஏதும் எப்படி ஏற்படும்?

மாநில அதிகாரங்களை எல்லாம் பறித்து மத்திய அரசு குவித்து வைத்துக்கொள்வதால், மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல—மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டுவிடாது!

வயோதிகர் நினைப்பைப் போன்றது அது!

‘உனக்கு வலிவு வேண்டாம் -- என்னிடமே இருக்கட்டும்; உனக்கு எது தேவையோ அதை என்னிடம் கேள்’ என்று மத்திய அரசு கூறுவது, 80-வயதான பிறகும் பெட்டிச் சாவியை வெள்ளி அரைஞாண் கயிற்றில் கட்டிக்கொண்டு -- படுக்கும்போது கையைச் சாவிக் கொத்தில் வைத்துக் கொண்டு --- திரும்பித் திரும்பிப் படுத்து, ‘சாவி நம்மிடம் இருப்பதால், பிள்ளைகள் பெட்டியைத் திறக்க மாட்டார்கள்’ என்று தவறாக எண்ணும் வயோதிகரின் நினைப்பைப் போன்றதுதான்!

அந்த நம்பிக்கைக்கு இன்று இடமுண்டா?

மத்திய அரசின் தலைமைப் பதவியிலிருப்பவர்கள் எல்லா அதிகாரங்களையும் தாங்கக்கூடியவர்கள் என்ற நம்பிக்கை இருந்தாலாவது, அவர்களிடம் எல்லா அதிகாரங்களையும் தரலாம்!

வஞ்சகத்திற்கு இடமில்லாமல்—நெஞ்சில் கையை வைத்துக் காங்கிரசுக்காரர்கள் கூறட்டும்; எல்லா இடங்களிலும் தனது செல்வாக்கைச் செலுத்தக் கூடிய நேரு போன்றவர்கள் எத்தனைப்பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்?

இப்படிக் கேட்பது காங்கிரசுக்காரர்களுக்கு வருத்தமாகக்கூட இருக்கும் --- கோபம்கூட வரலாம் --- உண்மையைச் சொல்கிறேன் என்று!

‘நேருவுக்குப் பிறகு, இந்தியா முழுவதையும் கட்டி ஆளும் திறன்படைத்தவர்’ என்ற நம்பிக்கையை இந்த நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்படுத்தக்கூடிய ஒருவர் இப்போது காங்கிரசில் இருக்கிறாரா என்று காங்கிரசுக்காரர்கள் கூறட்டும்! அவர்கள் எந்தப் பெயரைச் சொன்னாலும், அதை நம்புவதற்கு அவர்களிலேயே சிலர் தயாராக இல்லை!

மத்திய அரசுக்குப் பண்டித நேரு அதிக அதிகாரங்களைக் கேட்பது தவறாக இருந்தாலும், ‘அவர் தாங்கக்கூடியவர்’ என்ற நினைப்பில், அதிக அதிகாரங்களை மக்கள் தரத் தயாராக இருந்தார்கள்; ஆனால், அவ்விதம் தாங்கக்கூடியவர்கள் இல்லாத இந்த நேரத்தில் எப்படி அதிக அதிகாரங்களைத் தரமுடியும்?

பாங்கியில் போடப்பட்ட பணம் போன்று கருதுவது?

அதிகார வலிவு என்பது, செய்யும் வேலைக்கேற்ற வலிவாக இருக்க வேண்டுமே தவிர, பாங்கியில் போடப்பட்ட பணம் போல் கருதக் கூடாது!

நாட்டுப் பாதுகாப்புத் தவிர மற்ற அதிகாரங்களை அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம்!

மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும்; பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.

அதிகாரப் பங்கீட்டுக்கு குழு ஒன்று அவசியம்

“தற்போதுள்ள அரசியல் சட்டத்தை ஆராய்ந்து -- மாநில—மத்திய அரசுகளுக்குள்ள அதிகாரப் பங்கீடுகளை மாற்றி -- அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தரவேண்டும்; அதற்கான ஒரு குழு நியமித்து ஆராய வேண்டும்” என்று நிர்வாக சீர்திருத்தக் குழுவிடம் நான் யோசனை தெரிவித்துள்ளேன்; அவர்கள் அவ்விதம் ஒரு குழு நியமிக்காவிடினும், தமிழரசுக் கழகம், அதிகாரப் பற்றற்ற ஒரு குழுவை அமைக்கலாம்; சட்ட வல்லுநர்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், மாணவர் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், தொழில் வித்தகர்கள் போன்ற எல்லாத் தரப்பினரும் அதில் இடம் பெறவேண்டும்.

அந்தக் குழு, அரசியல் சட்டத்தை ஆராய்வதோடு, வெளி மாநிலங்களுக்கும் சென்று அவர்களது அனுபவங்களையும் கேட்டறிந்து, ‘எவ்விதம் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது’ என்ற விரிவான அறிக்கையை தயாரித்து--அடுத்த மாநாட்டிற்குள் அளிக்குமாறு வேண்டுகிறேன்.”

‘பலமிக்க மத்திய அரசு தேவை’ என்போரே....

சரிந்த சாம்ராஜ்யங்களை நினைவிலிறுத்துவீர்!

சென்னை, ஜூலை 22—

“மத்திய அரசு பலமாக இருந்தது -- குப்த சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது -- மொகலாய சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது -- பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்! ஆனால், இன்று அந்தச் சாம்ராஜ்யங்கள் எங்கே?

“சரிந்த சாம்ராஜ்யங்களுடன் இப்போது இருக்கிற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருத்தப்படுகிறேன்! அந்தச் சாம்ராஜ்யவாதிகள், தமது சாம்ராஜ்யங்களுக்கு அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவுதான் ஏற்பட்டது என்பதை சரித்திரம் உணர்ந்தவர்கள் அறிவார்கள்!

“ஔரங்கசீப் காலத்தில் இருந்த வலுவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான மத்திய ஆட்சியை சரித்திரத்தில் காண முடியாது! ஆனால், அந்தச் சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்பதை, இன்றையக் காங்கிரசார் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்!”

---அறிஞர் அண்ணா

(மாநில சுயாட்சிக் கருத்தரங்கில்)

‘மத்திய அரசின் யோசனைகளைக் கட்டளையாகக் கருத முடியாது’

மத்திய அரசின் கல்விக் கொள்கை பற்றி முதலமைச்சர் அண்ணா

சென்னை, ஜூலை 22—

முதலமைச்சர் அண்ணா அவர்கள் புதுடில்லியிலிருந்து சென்னை திரும்பியதும், செய்தியாளர்கள் அவரைச் சந்தித்து, கல்விக் கொள்கை பற்றி அண்மையில் மத்திய அரசு ஒப்புதல் செய்த தேசியக் கொள்கை பற்றிக் கருத்துத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டபோது, அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

“கல்விப் பிரச்சினை, முற்றிலும் மாநில அரசின் பொறுப்பிலுள்ளதாகும் என்பது, தமிழக அரசின் உறுதிமிக்க கருத்தாகும்; எனவே, கல்விப் பிரச்சினை பற்றி மத்திய அரசு தெரிவிக்கும் எந்த யோசனையையும் மாநில அரசு பரிசிலனை செய்யும்; ஆனால் அந்த யோசனைகளைக் கட்டளையாகக் கருதமுடியாது.”

என்னுடைய நம்பிக்கை சிதறிவிடவில்லை

“சேலம் உருக்காலைத் திட்டம் பற்றி டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தினீர்களா?” என்று செய்தியாளர்கள் கேட்டபோது, அண்ணா அவர்கள் தெரிவித்ததாவது:—

“இந்தத் திட்டம் பற்றிப் பேசுவதற்கு அங்கு வாய்ப்புகிடைக்கவில்லை; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டிலேயே இதற்கான ஆரம்பப் பணிகள் துவக்கப் படலாம் என உறுதியாக நம்புகிறேன்.

“சேலம் உருக்காலைத் திட்டம் பற்றி வேறு எவரும் எந்தவிதக் கருத்து வெளியிட்டிருந்தாலும், என் நம்பிக்கை இன்னமும் சிதறிப் போகவில்லை—நம்பிக்கையுடன்தான் இன்னமும் இருக்கிறேன்.”

“பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுத உதவி தருவது பற்றியும், இதுபற்றி நாடாளுமன்றத் தி. மு. க. குழுவின் நிலை என்ன என்பது குறித்தும் தலைமையமைச்சருடன் பொதுவாகப் பேசினேன்” என்று தெரிவித்த அண்ணா அவர்கள், அதுபற்றி மேலும் விளக்கியதாவது:—

“இராசதந்திர உறவில் இந்திய அரசு தோல்வியுற்று விட்டதாக நாடாளுமன்றத்தில் தி. மு. க. உறுப்பினர்கள் கடுமையாகக் குற்றஞ்சாட்டுவர்; ஆனால் அதேநேரத்தில், இந்தியா—சோவியத் நட்புறவு பாதிக்கப்படும் வகையில் எதுவும் பேசமாட்டார்கள்.”

உருப்படியான பலன் ஏதும் உருவாகிறதா?

“இரஷ்யாவைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் எந்தத் தீர்மானத்தையும் தி. மு. க. உறுப்பினர்கள் ஆதரிக்கமாட்டார்கள்” என்று தெரிவித்த அண்ணா அவர்கள், அது பற்றி விளக்கியதாவது:—

“நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத தொடரிலும், அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவ

(4-ம் பக்கம் பார்க்க)

மாயூரம் -- மணல்மேடு விவசாய மாநாட்டுத் தீர்மானங்கள்

விவசாயிகள் இன்னல்களை விரைந்து களையும் தமிழக அரசுக்குப் பாராட்டு

நியாயமான கூலி-வாரம் கிடைக்கும் வகையில் சட்டபூர்வக் குழு ஒன்று அமைக்க யோசனை

அறநிலையங்களில் கட்டாயக் கூட்டுறவுச் சாகுபடி மேற்கொள்ளக் கோரிக்கை

கடந்த 13-7-68 அன்று மாயூரம் வட்டம் மணல்மேட்டில், வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவவர்கள் தலைமையில் நடைபெற்ற விவசாய மாநாட்டில் நிறைவேற்றப்படட் தீர்மானங்கள் வருமாறு:—

முற்றிலும் புதிய—சனநாயக முறையில் நீர்வள மாநாடும், விவசாய மாநாடும் நடத்தி, விவசாயிகளின் — அதிகாரிகள் ஆகியோரின் கருத்துக்களை அறிந்து, பிரச்சினைகளுக்கு விரைவான பரிகாரம் தேடி வரும் தமிழக அரசினையும், குறிப்பாகப் பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை அமைச்சர்களையும் இம்மாநாடு பெரிதும் பாராட்டுகிறது.

நீண்ட நாட்களாகப் பெரும் குறைபாடாக இருந்துவந்த உரத் தட்டுப்பாட்டை நீக்கி தாராளமான உர விநியோகம் செய்ததால் ஏராளமான விளைச்சல் ஏற்பட வழிகோலியதற்காக தமிழ அரசையும், குறிப்பாக வேளாண்மை அமைச்சர் அவர்களையும் இம்மாநாடு பாராட்டுகிறது.

பயிர்த் தொழிலாளர்களுக்கும், நில உடைமைக்காரர்களுக்கும் இடையே ஒற்றுமை நிலவும் வகையில் மகசூலில் குத்தகை வாரங்களைப் பிரித்துக்கொள்வதில் யார் நேர்மையின்றி நடந்தாலும், அவர்களை விலக்கி விடும் நிலை ஏற்படும்படிச் சட்டபூர்வமான ஏற்பாடுகள் செய்யுமாறும், நியாயமான கூலி வாரங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்குமாறு செய்யக்கூடிய சட்டங்களைக் கட்டாயமாகச் செயல்படுத்துவதற்குக் கிராம மட்டத்தில் தகராறு தீர்வு குழுக்களை சட்டபூர்வமாக அமைக்குமாறும் தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

விவசாயத்தை நவீனப்படுத்துவதற்காகக் கூட்டுச் சாகுபடி முறையை ஊக்குவிப்பதற்காக; அற நிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்வோராவது கட்டாயம் கூட்டுறவு முறையை மேற்கொண்டு, அதன் வாயிலாக விதை—உரம்—உழவுக் கருவிகள்—பூச்சிக் கொலலி மருந்துகள் குறித்த காலத்தில் பெற வசதி செய்து கொடுத்து உதவச் சட்டங்கள் இயற்றவேண்டுமெனத் தமிழக அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

விவசாயிகள், நீர்ப்பாசனம் சம்பந்தமாக அதிகாரிகளுடன் நல்ல தொடர்புகொண்டு பயன் பெற, அதிகாரிகள்—விவசாயிகள் கொண்ட குழு ஒன்றை ரெவினியூ ரேஞ்சு மட்டத்தில் ஏற்படுத்தி உதவுமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மண்ணியாறு (காவிரிப் பகுதி) கடைமடை ஆயக்கட்டு நிலங்கள் நீர்ப்பாசன வசதியின்றித் தவித்தபோது, விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி, கிழக்கு மண்ணியாறு எல். சி. எஸ். மூலம் நீர்ப்பாய்ச்சிக் கொள்ள உத்தரவிட்டு உதவிய பொதுப்பணித் துறை அமைச்சருக்கும் தமிழக அரசுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதுடன், மண்ணியாறு தலைப்புத் தூர்ந்துவிட்டதால், கடை ஆயக்கட்டு நீர்ப்பாசனம் இயலாதுபோகுமாகையால், கொள்ளிடம் ஆயக்கட்டாக அமைத்துத் தருமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

விவசாயத்துக்கான பம்பு செட்டுகளுக்கு—அவை கடன் மூலம் அமைக்கப்பட்டதாலும், தனிப்பட்டவர்கள் சொந்தமாக அமைக்கப்பட்டதாலும் — வரிசைக் கிரமமாக விரைவில் மின்சார இணைப்புத் தருவதற்கு ஏற்பாடு செய்யுமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

ஏ-வகுப்பு வாய்க்கால்களின் பராமரிப்பு வேலைகளை அவ்வப்போது செய்து உதவுமாறு தமிழக அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

பயிர்ப் பாதுகாப்புக்குத் தேவையான உதவிகள் பரவலாகக் கிடைக்கும் வகையில், ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் பயிர்ப் பாதுகாப்புக்கான சாதனங்களுடன் நிறுவனங்கள் அமைக்க அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

விவசாயத் தொழிலில் நிம்மதியான சூழ்நிலை ஏற்பட நன்செய் நிலத்தில வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்து, அவர்கள் வேலை செய்யவேண்டிய வேலை நேரம்—தரப்படவேண்டிய கூலி ஆகியவற்றுச்குச் சட்ட வடிவம் தரத் தமிழக அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளை இணைக்கும் வகையில், மாயூரத்திலிருந்து திருமங்கலம் வழியாக அணைக்கரைக்கும்—மணல் மேட்டுக்கும் மாயூரத்திலிருந்து பட்டவர்த்தி வழியாக குறிஞ்சிக்கும் பஸ் விடக் கோரி, அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மாநாட்டு நிகழ்ச்சிகள்

மாயூரம் வட்டம் மணல்மேட்டில் சூலை 12, 13 ஆகிய இடங்களில் சமுதாய சீர்திருத்த — விவசாய மாநாடுகள் மணல்மேடு வெள்ளைச்சாமி பந்தலில் — மாணவர் சாரங்கபாணி அரங்கில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

ஊர்வலம்

12—7—68 காலை 10 மணிக்கு பட்டவர்த்தி சந்தைத் தோப்பிலிருந்து மாயூரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. வி. கோவிந்தசாமி தலைமையில் பல்லாயிரக்கணக்கானோர் புடைசூழ — யானைகள், குதிரைகள், டிரக்குகள், நாயன இசை, உறுமி மேளம், தஞ்சாவூர் பாண்டு வாத்தியம், பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், சிலம்பாட்டம் ஆகியவற்றுடன் மாநாட்டுப் பந்தலை பகல் 1-மணியளவில் அடைந்தது.

பிற்பகல் 1-மணியளவில் தோழர் எஸ். கணேசன் எம்.எல்.ஏ. கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர்.

பிற்பகல் 2-மணிக்கு சென்னை மணிவண்ணன்-பத்மினி குழுவினரின் கலை நிகழ்ச்சியும், 3-மணிக்கு திருவெண்காடு டி. பி. சுப்பிரமணியம் குழுவினரின் நாயன இசையும் நடைபெற்றன.

மாலை 4-மணிச்கு மாநாட்டுச் செயலாளர் இரா. சிவப்பிரகாசம், திரு. வி. மாயவன் எம்.பி. அவர்களை மாநாட்டைத் துவக்கிவைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. வி. மாயவன் எம்.பி. சமுதாயச் சீர்திருத்த மாநாட்டினைத் துவக்கிவைத்துப் பேசியபின், சட்டமன்ற உறுப்பினர் என். கிட்டப்பா அனைவரையும் வரவேற்று, மாநாட்டுத் தலைவரை முன்மொழிந்தார்.

அதனை வழிமொழிந்து தோழர்கள் அ செங்குட்டுவன், ஆர். ஜோசப் எம்.சி., ஜி. இராமச்சந்திரன், ஜி கே. மூர்த்தி, ஏ தேவந்திரன் எம்.சி., பி. மதிவாணன், பூதங்குடி குழந்தைவேலு சித்தமல்லி கலியமூர்த்தி, கோ. இராமதாசு, ஏ. வைத்திநாதசாமி ஆகியோர் பேசினர்.

பின்னர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. தலைமையுரை நிகழ்த்தினர்.

அடுத்து. திருமதி கிரேசி சேவியர், எஸ். ஆர். இராதா எம்.சி., தில்லைவில்லாளன் எம் ஏ.,பி.எல்., எம்.பி., அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. ஆகியோர் பேசியபின், செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர்கள்.

இரவு 10 மணிக்கு முருகுபாண்டியன் குழுவினரின் கலை நிகழ்ச்சியும், இரவு 11 மணிக்கு முரசொலி நாடக மன்றத்தாரின் அமைச்சர் மு. கருணாநிதி தீட்டிய ‘காகிதப் பூ’ நாடகம் திரு. டி. கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது.

விவசாய மாநாடு

13—7—68 காலை 9-மணிக்கு இராசபாளையம் மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சியுடன் விவசாய மாநாடு துவங்கியது.

காலை 10 மணிக்கு மாநாட்டுச் செயலாளரில் ஒருவரான சி. கலியபெருமாள் கேட்டுக்கொள்ள— மன்னை திரு. ப. நாராயணசாமி மாநாட்டினைத் துவக்கி வைத்துப் பேசினர்.

பின், தோழர் என். கிட்டப்பா எம்.எல்.ஏ. வரவேற்று தலைவரை முன்மொழிந்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னை மு பாலகிருஷ்ணன் எம்.சி., கி. சத்தியசிலன், முட்டம் கிருஷ்ணமூர்த்தி, ஆர். கன்னையன், இராசி. குயில்வளவன், பி. வெங்கடகிருஷ்ணன், டி கிருஷ்ணமூர்த்தி, வை. சுப்பிரமணியம் ஆகியோர் வழிமொழிந்து பேசியபின் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் மாநாட்டுத் தலைமை உரையினை நிகழ்த்தினர்கள்.

பின் சித்தமல்லி என். சோமசுந்தரம் எம்.எல்.ஏ., நன்னிலம் அ. நடராசன் ஆகியோர் உரையாற்றியபின், மாநாடு, இடைவேளைக்குக் கலைந்து பிற்பகல் 3-மணிச்கு சிவகங்கை சேதுராசன் குழுவினரின் இன்னிசையுடன் துவங்கியது.

மாலை 4-மணிக்கு இசைமுரசு நாகூர் இ. எம். அனீபா குழுவினரின் இனனிசை நடைபெற்றது.

தொடர்ந்து பேராவூரணி கு. அடைக்கலம், ம. கோ. மணி, புலவர் முருகையன் எம்.எல்.ஏ., வடகால் அமீது, பொன் தருமன், குளித்தலை முத்துக்கிருஷ்ணன், அறந்தாங்கி இராசன், தென்கோவன், கா. சுப்ரவேலு எம்.பி., சி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கோ. சி. மணி எம்.எல்.சி., காட்டூர் கோபால், சாட்டூர் இராமையா, எஸ். இராகவானந்தம் எம் எல்.சி. ஆகியோர் பேசியபின் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர்கள்.

இரவு 11 மணிக்கு தோழர் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.எம்.ஏ. தலைமையில், ‘காகிதப் பூ’ நாடகம் நடைபெற்றது.

இந்த மாநாட்டில், தென்காசி வெற்றி வீரர் கதிரவனும் கலந்து கொண்டு பேசினர்.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் என். கிட்டப்பா எம்.எல்.ஏ. அவர்களுக்கு அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் பொன்னாடை போர்த்தி பாராட்டினர்.

கள்ளக்கடத்தல் தங்கத்துக்குப் பதில் வெள்ளி

ஆண்டுதோறும் எட்டுக் கோடி பவுன் மதிப்புக்கு வெளியேற்றம்

இலண்டன், சூலை 20—

இந்தியாவிலிருந்து வெள்ளி கள்ளக் கடத்தல் காரணமாகக் கள்ளமார்க்கெட் லேவாதேவியில் இந்திய ரூபாயின் மதிப்புக் கூடியிருக்கிறதாம்.

இந்தியாவுக்குள் கடத்தப்படும் தங்கத்துக்குக் கொடுக்கப்படும் பணத்துக்காகவே இப்படி, வெள்ளி இந்தியாவிலிருந்து கடத்தப்படுகிறதாம்.

ஆண்டுதோறும் இந்தியாவுக்குக் கடத்தப்படும் 8 கோடி பவுன் மதிப்புத் தங்கத்துக்கு, இந்திய ரூபாயில் 50 அல்லது 60 சதவிகிதம் தள்ளுபடி செய்து பவுன், டாலர் அளவில் பணம் தரப்படுகிறதாம்.

பெர்சியாவிலுள்ள துபாய் நாட்டுக்கு இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டுவரப்படும் வெள்ளி, அங்கிருந்து பிரிட்டனுக்குச் சட்டபூர்வமாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது; இது, பிரிட்டனின் வணிகப் பற்றுக்குறையைக் கணிசமாகவே பாதித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த மே திங்களில் மட்டும் பிரிட்டன், துபாயிலிருந்து 70 இலட்சம் பவுன் மதிப்புள்ள வெள்ளியை இறக்குமதி செய்திருக்கிறதாம்; இது, அத்திங்களில் பிரிட்டனின் வணிகப் பற்றுக்குறையில் 10 சதவிகிதமாம்.

கடத்தல்காரர்கள், இதிலிருந்து அடைந்த இலாபம் மட்டும் 3 மில்லியன் பவுன்களாம்!

செய்தி ஒன்றின்படி, இந்தியாவின் வெள்ளி இருப்பு மட்டும் உலகத்தின் 10 ஆண்டு உலோகத் தேவையைச் சமாளிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறதாம்.

இதன் அளவு 5,000 மில்லியன் அவுன்சு ஆகுமென்றும் உலகத் தேவையின்அளவு சென்ற ஆண்டு 351 மில்லியன் அவுன்சு ஆகுமென்றும் கூறப்படுகிறது.

விவசாயிகட்கு ரூ. 1-கோடிவரை கடன்

கடன் கோரிக்கை மனுக்களை விரைந்து பைசல் செய்ய ஏற்பாடு

இலவச மண் வளச் சோதனை --- நிலக்காரர்கட்கு நிபுணர்கள் யோசனை

செங்கற்பட்டு மாவட்டத்தில் உணவு உற்பத்தி பெருக்கத்துக்கான திட்டங்கள் – கலெக்டர் விளக்கம்

சென்னை, சூலை 20—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இலட்சுமிகாந்தன் பாரதி, நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:—

“இந்த மாவட்ட விவசாயிகளின் கடன் தேவை சுமார் ரூ. 1 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. நில அடமான பாங்கிகள் —விவசாயத் தொழில்கள் கார்ப்பரேஷன்—வர்த்தக பாங்கிகள் ஆகியவை இக்கடனுதவியை அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

சிண்டிகேட் பாங்கி இந்த மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்கனவே ரூ. 25-இலட்சம் கடனாக வழங்கியிருக்கிறது; மேற்கொண்டு ரூ. 25-இலட்சம் இவ்வாண்டே கடனாகக் கொடுக்க அந்த பாங்கி முன்வந்துள்ளது.

குழாய்கள் மூலம் ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க செங்கற்பட்டு மாவட்டத்துக்கு அரசினரால் ரூ. 2.9 இலட்சம் ஒதுக்கப்பட்டது; இதில் ஏற்கனவே ரூ. 2 இலட்சம் செலவிட்டுள்ளது; மேற்கொண்டு ரூ. 5 இலட்சம் ஒதுக்குமாறு அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

விவசாய—தொழில்கள் கார்ப்பரேஷனிடம் கடன் கோரி வரும் மனுக்கள் விரைவில் பைசலாக வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு டிவிஷனுக்கும் சென்று மனுக்களைப் பரிசீலிக்கப் போகிறேம்; இதற்காக ஒரு டிவிஷனுக்கு ஒருநாள் வீதம் நான்கு நாட்கள் ஒதுக்கப் போகிறேன்.

மண் வள சோதனை நிலையங்கள் ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது; காஞ்சிபுரத்தில் ஒரு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது; அங்குள்ள நிபுணரிடம் விவசாயிகள் தங்கள் நிலத்தின் வளத்தை இலவசமாகச் சோதித்து, அந்த நிலத்துக்கு எவ்வளவு உரம் அல்லது பூச்சிகொல்லி மருந்து பயன்படுத்த வேண்டும என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மாநிலம் முழுமைக்கும் இரண்டு நடமாடும் மண்வளச் சோதனை யூனிட்டுகள் ஏற்படுத்த அரசு அனுமதி கொடுத்துள்ளது.

வாலாசாபாத்தில் விவசாயப் பொருட்காட்சி ஒன்று நடத்தப்படும்; இங்கு விசைக் கலப்பை (7 குதிரை சக்தியுள்ளது) இயக்கிக் காட்டப்படும்.

காஞ்சி நகர் வளர்ச்சித் தொடர்பாக அந்நகரில் பம்பாய் கக்கூசுகள் கட்டுவதற்கான ஒரு திட்டத்துக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அந்நகரில் டாக்சி சொந்தக்காரர்கள் நியாயமான கட்டணங்கள் வாங்க ஒப்புக்கொண்டுள்ளனர்.”

படியரிசி தத்துவத்துக்கே விரோதிகள்

ஆகஸ்டில் நடத்தவிருக்கும் அர்த்தமற்ற கேலிக்கூத்து!

"காங்கிரசார், ஆகஸ்டு மாதத்தில் கிளர்ச்சி நடத்தப் போகிறார்களாம் -- எதற்காகக் கிளர்ச்சி--'தமிழ்நாடு முழுவதும் படி அரிசி போட வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்துக் கிளர்ச்சி நடத்தப் போகிறார்களாம்; அந்தக் கிளர்ச்சியை நான் வரவேற்கிறேன்.

"ஆனால் அந்தக் கிளர்ச்சியை அவர்கள் எங்கே செய்ய வேண்டும் -- தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசாங்க அலுவலகங்களின் முன்னால் செய்யவேண்டும்; ஏனென்றால், மாநில அரசு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை நோக்கி, 'ரூ. 10 கோடி உதவி கொடுக்க வேண்டும்' என்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கும் அரசு ஆகும்.

"ஆகவே, ஆகஸ்டு மாதத்தில் கிளர்ச்சி நடத்தப் போவதாகக் கூறும் காங்கிரசார், மத்திய அரசு அலுவலகத்தின்முன் நின்று, 'தமிழ்நாட்டில் படி அரிசித் திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசுக்கு 10 கோடி ரூபாய் உதவி தருக!' என்று முழங்கிக் கிளர்ச்சி நடத்த முன்வருவார்கள் என்றால், அந்தக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளும் முதல் ஆளாகக்கூட நான் இருப்பேன்!

"ஆனால், நடப்பது என்ன? 'படி அரிசி இங்கே வேண்டும்' என்று கோருகிற இதே காங்கிரசார்தான், டில்லிக்குச் சென்று, 'படி அரிசித் திட்டத்துக்காக அவர்களுக்கு உதவாதீர்கள்' என்று கூறுபவர்களாக இருக்கின்றனர்!

--அமைச்சர் மு. கருணாநிதி
(தியாகராயர் நகர் கூட்டத்தில்)

அமைச்சர் முத்துசாமி இரஷ்யா பயணம்

சென்னை, ஜூலை 22—

தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், நேற்று காலை 9-10 மணிக்கு விமானமூலம் தமது மேலை நாட்டுச் சுற்றுப்பயணத்தைத் துவக்கினார்.

சோவியத் இரஷ்யாவின் அழைப்பை ஏற்று இரஷ்யாவுக்குச் செல்லும் சென்னை மாநகராட்சி நல்லெண்ணத் தூதுக்குழுவுக்கு அமைச்சர் முத்துசாமி தலைமை வகிக்கிறார்.

நேற்று மீனம்பாக்கம் விமான நிலயத்தில், அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, செ. மாதவன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, மற்றும் சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏராளமான கழகத் தோழர்களும், அமைச்சர் முத்துசாமி அவர்களை வழியனுப்பிவைத்தனர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியில் எந்த வளர்ச்சியும் ஏற்படவில்லை' — இப்படி, 'இல்லை; இல்லை' என்று சொல்லிப் பார்த்த பின்பும், மக்கள் மன்றம் நம் பக்கம்தான் இருந்தது!

"காமராசர் அவர்களும், சுப்பிரமணியம் அவர்களும் சொல்வதற்காக நாடு எதையும் நம்பாது!"

அமைச்சர் நெடுஞ்செழியன்
(70-வது வட்டக் கூட்டத்தில்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வ.ஆ.மாவட்ட தி.மு.க. நகர -- கிளைகளின் தேர்தல்கள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி, வ. ஆ. மாவட்டத்தின் கீழ்க்காணும் கிளைகளுக்கான தேர்தல்கள் --- கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆணையாளர்கள் தலைமையிலும், கீழ்க் குறிப்பிட்டுள்ள இடத்திலும நேரத்திலும் நடைபெறும் :—

27—7—68

ஆம்பூர்
ஆணையாளர் : டி. பி. சினிவாசன்
இடம் : கழகப் பணிமனை
நேரம் : பிற்பகல் 4-மணி

தானிப்பாடி
ஆணையாளர் : எம். என். இராமன்
இடம் : கழகப் பணிமனை
நேரம் : மாலை 4-மணி

வாணியம்பாடி
ஆணையாளர்: ஆர். சம்பங்கி
இடம் : பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

28—7—68

அரக்கோணம்
ஆணையாளர் : மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம் : பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

இராணிப்பேட்டை
ஆணையாளர் : பெ. தா. ஈசுவரப்பன்
இடம் ; பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

திருப்பத்தூர்
ஆணையாளர் : எம். எஸ். இராதாகிருஷ்ணன்
இடம் - பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

திருவண்ணாமலை
ஆணையாளர் : இரா. தர்மலிங்கம்
இடம் : பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

குடியேற்றம்
ஆணையாளர் : மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம் : பயனியர் விடுதி
நேரம் : மாலை 4-மணி

கலசப்பாக்கம்
ஆணையாளர் : பி. கே. முனுசாமி
இடம் : கழகப் பணிமனை
நேரம் : காலை 10-மணி

பண்ருட்டி நகர தி.மு.க. கிளை தேர்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதையொட்டி, தெ. ஆ. மாவட்டம் பண்ருட்டி நகர தி. மு. க. கிளையின் தேர்தல் 28—7—68 காலை 10 மணிக்கு பண்ருட்டியில் நடைபெறும்.

—தலைமை கழகம் (தி.மு.க.)

உடுமலை நகர தி.மு.க. மறு தேர்தல்கள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதையொட்டி, கோவை மாவட்டம் உடுமலை நகர தி.மு.க. கிளையின் அவைத் தலைவர், வட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகளுக்கான மறு தேர்தல், 28—7—68 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும்.

ஆணையாளர் பெயர் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமை கழகம் (தி.மு.க.)

சேவூர் தி. மு. க. கிளை மறுதேர்தல்

★

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதையொட்டி வ. ஆ. மாவட்டம் சேவூர் தி. மு. க. கிளையின் மறுதேர்தல், 24—7—68 காலை 10 மணிக்கு தோழர் சமரசம் பி.ஏ.பி.எல். அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெறும்.

—தலைமை கழகம் (தி.மு.க.)

கழகத் தேர்தல்:

வட்டக் கழகம்

வட்டத் தகுதி படைத்த

பெருநகரக் கழகம்

ஆகியவைகளின் தேர்தலில் போட்டியிட விரும்பும்

வேட்பாளர்களுக்கு விளக்கம்

1. வட்டக் கழகம் -- வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகம் ஆகிய அமைப்புக்களின் பொறுப்புக்கள் (பதவிகள்) என்பன :—

   (அ) அவைத் தலைவர்
   (ஆ) செயலாளர்
   (இ) துணைச் செயலாளர்
   (ஈ) பொருளாளர்
   (எ) மாவட்டப் பிரதிநிதிகள்
   (ஏ) செயற்குழு உறுப்பினர்கள்

2. மேற்குறிப்பிட்ட வரிசைப்படியே தேர்தல்கள் நடைபெறும். ஒவ்வொரு பொறுப்புக்கான தேர்தல் முடிந்ததும், ஆணையாளரால் முறைப்படி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்ட பிறகே அடுத்த பொறுப்புக்கான தேர்தலை ஆணையாளர் நடத்துவார்.

3. மேற்கண்ட பொறுப்புக்களுக்குப் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள், கழகத்தில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக உறுப்பினராக இருந்திருக்க வேண்டும.

4. ஒவ்வொரு பொறுப்புக்கான தேர்தல் நடைபெறும்விவரத்தை -- அதாவது, வேட்பாளர் பட்டியலை --- ஆணையாளர் அறிவிக்கும்போது போட்டியிலிருந்து விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், உடனே எழுத்துமூலமாக ஆணையாளரிடம், தாம் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும் மடலைத் தரலாம்; அதற்கேற்ப ஆணையாளர், போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும் வேடபாளரின் பெயரை வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டு, முடிவான பட்டியலை அறிவிப்பார். அவ்வாறு போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும் வேட்பாளருக்குரிய கட்டணத்தைத் தலைமைக் கழகத்தால் அந்த வேட்பாளருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

5. தலைமைக் கழகத்தால் பரிசீலனை செய்யப்பட்டு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் ஆணையாளரிடம் சேர்ப்பிக்கப்படும். அந்த வேட்பாளர்களைத் தவிர வேறு யாரிடமிருந்தும் எந்த ஒரு பொறுப்புக்கும் தேர்தல் நாளன்று வேட்பாளர் விண்ணப்பத் தாள்களை ஆணையாளர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

6. 24—7—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேருமாறு வேட்பாளர்கள், தங்களின் விண்ணப்பத் தாள்களை முறைப்படி நிறைவு செய்து கட்டணத் தொகையுடன் அனுப்பிவைக்க வேண்டும்.

7. ஒருவர் எத்தனைப் பொறுப்புக்களுக்கு விரும்பினாலும் போட்டியிடலாம். அவ்வாறு போட்டியிடும் வேட்பாளர், அந்தந்தப் பொறுப்புக்குத் தனித்தனியான விண்ணப்பத் தாளில் தனித்தனியான கட்டணத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

8. வேட்பாளர்களின் விண்ணப்பத் தாள்கள் தலைமைக் கழகத்தால் ஜூலை 26, 27 ஆகிய நாட்களில் பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளபபட்ட வேட்பாளர்களின் பட்டியல் அறிவிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படாத விண்ணப்பங்களுச்குரிய வேடபாளர்களுக்கு, அதற்குரிய விளக்கம் அறிவிக்கப்படும். பரிசீலனையின்போது உடன் இருக்க விரும்பும் வேட்பாளர்கள், தங்கள் தங்கள் பொறுப்பில் தலைமைக் கழகத்திற்கு நேரிலும் வரலாம்.

மற்ற விவரங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டும்.

—தலைமை கழகம் (தி. மு. க.)

புதுவையில் குண்டர்கள் வெறிச் செயல்!

கழகத் தொழிற் சங்கத் தலைவர் செ. முத்து தாக்கப்பட்டார்

புதுவை, ஜூலை 20—

புதுவை கழகத் தோழரும், திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவருமான தோழர் செ. முத்து, நேற்று புதுவை நகர வீதியில் சென்றுகொண்டிருந்தபோது அவரைச் சிலர் வழிமறித்துத் தாக்கியிருக்கின்றனர்.

முகத்திலும் வயிற்றிலும் பலத்த அடிபட்டு வீழ்ந்த அவரை கழகத் தோழர்கள் தூக்கிச் சென்று மருத்துவ மனையில் சேர்த்தனர்.

மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் தோழர் முத்து அவர்களை முன்னாள் புதுவை முதலமைச்சர்களான குபேர், பரூக் மரைக்காயர், புதுவை வட்டச் செயலாளர் எம்.ஏ. சண்முகம் ஆகியோர் சென்று பார்த்தனர்; மற்றும் கழகத் தோழர்கள் சென்று பார்த்த வண்ணமுள்ளனர்.

மத்திய அரசின்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தென்பது, பிரச்சினைகளையே சுவையற்றதாகவும், பயனற்றதாகவும் செய்து விடுகிறது: உருப்படியான பலன் ஏதும் கிடைப்பதற்கும் இடமில்லாததாகிவிடுகிறது."

மாநில அரசுகளுடன் நிதிக் குழு விவாதிக்கும்

"புதுடில்லியில் நிதிக் குழுவுடன், தமிழகத்தின் நிதி நிலைமைபற்றி விவாதித்தேன்; மாநிலத்தின் சார்பில் ஓர் 'அறிக்கை'யையும் அளித்தேன்; மாநிலத்தின் நிதி வருவாய்-செலவினம்பற்றி முழு அளவில் விவாதம் நடைபெற்றது; நான் எடுத்துச் சொன்னவைகளைப்பற்றிக் கவனிப்பதாக நிதிக் குழு உறுதியளித்தது"

என்று செய்தியாளரின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், அதுபற்றி மேலும் விளக்கியதாவது :—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டுத் திட்டங்கள்பற்றித்தான் குறிப்பாக விவாதிககப்பட்டது; நடப்பு ஆண்டுக்கு நிதிகளைப் பகிர்ந்தளிப்பதுபற்றி மத்திய அரசுக்கு ஓர் இடைக்கால அறிக்கையைக் குழு அளிக்கும்; இது சம்பந்தமாகக் குழு, மாநில அரசுகளுடன் விரிவான அடிப்படையில விவாதிக்கும்.'

வட்டிச் சுமையினுல் ஏற்படும் தொல்லை

"ரிசர்வ் பாங்கியிலிருந்து அதிகப் பற்று (ஓவர்-டிராபடு) வாங்கும் பிரச்சினை, பல மாநிலங்களின் நிதி நிலைமையைப் பாதிக்கிறது.

"மத்திய அரசுக்கு மாநில அரசு தரவேண்டிய வட்டித் தொகைகள்—திருப்பித் தரப்படவேண்டிய கடன் தவணைகள் ஆகியவைகளினுல்தான் இந்த அதிகப் பற்றுப் பிரச்சினை மாநிலங்களுக்கு ஏற்படுகிறது. இந்தச் சுமையைக் குறைப்பதற்கு மத்திய அரசு வழி கோலாதவரையில் இந்த அதிகப் பற்று பிரச்சினை, அச்சுறுத்திக்கொண்டே இருக்கும்.

"கடன்களுக்கு வட்டியாகவே கூடுதலான தொகைகளை மாநில அரசுகள் செலுத்துகின்றன;

'மாநிலங்களின் வருவாய்கள்—பொறுப்புக்கள்—தேவைகள் — ஆகியவற்றையெல்லாம் நிதிக் குழு, கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நிதிக் குழுவிடம் முறையிட்டேன்; இரண்டாவது நிதிக் குழு இம்முறையீட்டின் உண்மை நிலையை உணர்ந்து உரிய நடவடிககை எடுக்க விரும்பியது; ஆனுல், அதற்குப் பின் உருவான நிதிக் குழுக்கள், இந்தப் பிரச்சினைகளைப் பற்றிக் கவனிக்கவே இல்லை; இப்போதைய நிதிக் குழுவிடம் மீண்டும் முறையிட்டிருக்கிறேன்; அது கவனிக்கும் என்று நம்புகிறேன்."